# The College of Otorhinolaryngologists & Head and Neck Surgeons of Sri Lanka (CORLHNS)

*ENT Department, National Hospital of Sri Lanka, Regent Street, Colombo 10.*
*Phone: +94 114 933764   E mail: entsrilanka@gmail.com   web: www.entsrilanka.org*

**President**
***Dr. K.Y.S. Weerakkody***
*Mobile:077 730 3748*
*yasathweerakkody@yahoo.com*

**President-Elect**
***Dr. K.D.R.A. Kirihene***
*Mobile:077 377 5771*
*kirihene@hotmail.com*

**Secretary**
***Dr. S. Densil Indika***
*Mobile: 077 766 6267*
*sdindika@hotmail.com*

**Treasurer**
***Dr.(Mrs.) Selvarajini Vettivelu***
*Mobile:077 323 0215*
*vett_selvi@yahoo.com*

**Scientific Secretary**
***Dr.(Mrs.) Sithara Dissanayaka***
*Mobile: 077 366 9442*
*sithdissanayake@gmail.com*

**Asst. Secretary**
Dr. Sanjeewani Rupasinghe
077 735 1712

**Social Secretary**
Dr. D.D. Jayasekara
077 244 7862

**Co Editors**
Dr.M.W.Zaffarulla
0777804315
Dr.Akram Drahaman
0775713156

**Past President**
Dr. A.D.K.S.N. Yasawardene
077 735 6138

**Past Secretary**
Dr. D.A.D.G. Daminda
077 206 5966

**Past Treasurer**
Dr. Amal Fernando
071 808 9097

**Committee Members**
Dr. R.P. Dayasena
077 747 5338
Dr. C. Narampanawa
077 788 5066
Dr. J.M.R.G. Jayaweera
077 209 7807
Dr. V. Jeevathas
071 487 2807

13/05/2021

**இலங்கை காது மூக்கு தொண்டை அறுவைச் சிகிச்சைக் கல்லூரியினால் பொது மக்களிற்கு வழங்கப்படும் அறிவுறுத்தல்கள்**

காது மூக்கு தொண்டை நோய்களிற்கான சிகிச்சையில் கோவிட் -19 பேரிடர் ஏற்படுத்தும் தாக்கம் பற்றிய விளக்கம். இந்த பேரிடரின் மூன்றாவது அலையின் தொற்றானது வேகமாகப் பரவுவதுடன் அதிகளவானோர் நோய் அறிகுறிகளுடன் இருப்பதையும் காணக்கூடியதாய் இருக்கின்றது.

பெரும்பாலான காது மூக்கு தொண்டை சோதனைகள் (உ+ம் - எளிய குரல்வளைச் சோதனை) மற்றும் செய்முறைகள் (உ+ம் - குழாய் விட்டுப் பார்த்தல், சத்திரசிகிச்சை) போன்றவை நோயாளியில் வளித்துணிக்கைகளை உற்பத்தி செய்து, சூழலிற்கு அதனை பரப்புவதை தூண்டுவதென அடையாளங் காணப்பட்டுள்ளன. எனவே கோவிட் -19 தொற்றுள்ள நோயாளியிடமிருந்து பிறப்பிக்கப்படும் வளித்துணிக்கைகள் இலகுவாக வைத்தியர் மற்றும் ஊழியர்களிற்குக் கடத்தப்படுகிறது. இவ்வாறு சுகாதார ஊழியர்களிற்குத் தொற்று ஏற்பட்டால், அவர்களால் சுகாதார சேவைகளை வழங்கமுடியாது. இதனால் அச்சிகிச்சைப் பிரிவை அல்லது முழு வைத்தியசாலையையே மூடவேண்டி இருக்கும். அத்துடன் இத்தொற்றுக்குள்ளான சுகாதாரப் பிரிவினர் நோய் அறிகுறி தென்பட முந்தய காலப்பகுதியில் ஏனையவர்களிற்கும் நோயைப் பரப்பக்கூடிய சந்தர்ப்பம் உள்ளது. தற்போது அதிகளவான நோயாளர்கள் நோய் அறிகுறிகளுடன் வருவதால் வைத்தியசாலை மற்றும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுகளில் அதிகளவு படுக்கைகள் தேவைப்படுகிறது.

மேற்கூறிய காரணங்களால் அவசியமற்ற நேரங்களில் காது மூக்கு தொண்டை சோதனைகள் மற்றும் செய்முறைகளைத் தவிர்க்க அல்லது பிற்போடுவதற்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இவை அவசியமெனில் அவை முழுப் பாதுகாப்புக் கவசங்களுடனேயே செய்யப்படுகிறது. இதனால் இந்த பேரிடர் காலத்தில் அவசரமற்ற காது மூக்கு தொண்டை செய்முறைகள் பிற்போடப்படுவதையும் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளே காது மூக்கு தொண்டை சிகிச்சை பிரிவில் வழங்கப்படுவதையும் பொது மக்கள் அவதானிக்கக்கூடியதாக இருக்கும். ஆனால் நோயாளர்கள் வைத்தியசாலைக்கு அழைப்பினை ஏற்படுத்தி, காது மூக்கு தொண்டை வைத்தியர்களது ஆலோசனைகள் மற்றும் சிகிச்சையை பெறுவதை வரவேற்கிறோம். அதிகரித்துச் செல்லும் நோய் அறிகுறியுள்ள கோவிட் -19 நோயாளர்களிற்குத் ஏற்ப தேவையான படுக்கை வசதிகள் வைத்தியசாலை மற்றும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுகளில் அதிகரித்துச் செல்லுவதால் அவசரமற்ற வழமையான சத்திரசிகிச்சைகள் பிற்போடப்பட்டு அவசரமான மற்றும் விபத்து சேவைகளே இந்த பேரிடர் காலத்தில் வழங்கப்படுகிறது.

காது மூக்கு தொண்டை சிகிச்சை வழங்கும் வைத்தியர்களான நாங்கள் இந்த பேரிடர் காலப்பகுதியில் காது மூக்கு தொண்டை சம்பந்தமாக வைத்தியசாலைக்கு வருவதைத் தவிர்ப்பதற்கு பொது மக்கள் செய்ய வேண்டியவை பற்றிய முக்கியமான தகவல்களைத் தருவதற்கு விரும்புகிறோம்.

1. நீங்கள் மீன் அல்லது இறைச்சி சாப்பிடும்பொழுது எலும்புகள் தொண்டையில் சிக்காமல் கவனமாக இருக்கவும். முக்கியமாக சிறுகுழந்தைகளிற்கு உணவு கொடுக்கும் பொழுது அவதானமாக இருக்கவும்.

# The College of Otorhinolaryngologists & Head and Neck Surgeons of Sri Lanka (CORLHNS)

*ENT Department, National Hospital of Sri Lanka, Regent Street, Colombo 10.*

*Phone: +94 114 933764    E mail: entsrilanka@gmail.com    web: www.entsrilanka.org*



**President**
***Dr. K.Y.S. Weerakkody***
*Mobile:077 730 3748*
*yasathweerakkody@yahoo.com*

**President-Elect**
***Dr. K.D.R.A. Kirihene***
*Mobile:077 377 5771*
*kirihene@hotmail.com*

**Secretary**
***Dr. S. Densil Indika***
*Mobile: 077 766 6267*
*sdindika@hotmail.com*

**Treasurer**
***Dr.(Mrs.) Selvarajini Vettivelu***
*Mobile:077 323 0215*
*vett_selvi@yahoo.com*

**Scientific Secretary**
***Dr.(Mrs.) Sithara Dissanayaka***
*Mobile: 077 366 9442*
*sithdissanayake@gmail.com*

**Asst. Secretary**
Dr. Sanjeewani Rupasinghe
077 735 1712

**Social Secretary**
Dr. D.D. Jayasekara
077 244 7862

**Co Editors**
Dr.M.W.Zaffarulla
0777804315
Dr.Akram Drahaman
0775713156

**Past President**
Dr. A.D.K.S.N. Yasawardene
077 735 6138

**Past Secretary**
Dr. D.A.D.G. Daminda
077 206 5966

**Past Treasurer**
Dr. Amal Fernando
071 808 9097

**Committee Members**
Dr. R.P. Dayasena
077 747 5338
Dr. C. Narampanawa
077 788 5066
Dr. J.M.R.G. Jayaweera
077 209 7807
Dr. V. Jeevathas
071 487 2807


2. சிறுவர்கள் தவறுதலாக காது மூக்கு தொண்டையினுள் பிறபொருட்களை இடாமல் மிகவும் கவனமாக இருக்கவும். பொதுவான பிறபொருட்களாவன: சிறிய பாகங்களுடனான விளையாட்டுப் பொருட்கள், பிளாஸ்டிக் மணிகள், காசுக்குற்றிகள், கிளிப் மற்றும் விதைகள். தயவுசெய்து இந்த பேரிடர் காலப்பகுதியில் குழந்தைகளிற்கு இப்பொருட்கள் கிடைக்காதவாறு பார்த்துக்கொள்ளவும்.
3. பட்டன் பற்றிகள் காது மூக்கு தொண்டையினுள் சென்றால் பாரதூரமான விளைவுகளை இழையங்களில் ஏற்படுத்தும். எனவே குழந்தைகளை பற்றிகள் வைத்து விளையாட விடவேண்டாம்.
4. மூன்று வயதிற்கு குறைந்த குழந்தைகளிற்கு கச்சான் மற்றும் வன்மையான உணவினைக் கொடுக்க வேண்டாம். இவை சுவாசப்பாதையினுள் சென்றால் அவசரமான சிகிச்சை நிலையை ஏற்படுத்தும்.
5. கட்டுப்பல் பாவிப்பவர்கள் தவறுதலாக அதனை விழுங்காமல் கவனமாக இருக்க வேண்டும்.
6. காது துடைப்பான், கிளிப், திறப்பு, தடி அல்லது குச்சி என்பவற்றால் காது மற்றும் செவிப்பறை மென்சவ்வில் காயம் ஏற்படாமல் தவிர்க்க அவற்றை காதினுள் செலுத்தி காதினை சுத்தம் செய்ய வேண்டாம்.
7. பிள்ளைகள் வீட்டில் விளையாடும் பொழுது விழுந்து காயம் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்

மேற்கூறிய விபத்துகள் ஏற்படின் நீங்கள் வைத்தியசாலைக்கு வரவேண்டி இருக்கும். அங்கே நீங்கள் கோவிட் -19 அடையாளப்படுத்தல் படிமுறையினூடாக வடிகட்டபட்ட பின்னே சிகிச்சையினை பெறுவதனால் சிகிச்சையிற்கு காலதாமதம் ஏற்படுவதுடன், நீங்கள் மற்றும் உங்கள் அன்புக்குரியவர்கள் கோவிட் -19 நோயாளர்களுடன் கலப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படுகிறது. எனவே தயவுசெய்து இந்த பேரிடர் காலப்பகுதியில் தேவையான தற்பாதுகாப்பு முறைகளை செய்து மேற்கூறிய விபத்துகள் ஏற்படுவதைத் தவிருங்கள்.

மேற்கூறிய விபத்துகளைத் தவிர்ப்பதன் மூலம் வைத்தியசாலையின் வளங்கள் மற்றும் சுகாதார பிரிவினரின் நேரம் என்பன வீணாகாமல் சேமிக்கலாம் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

……………………………………..

வைத்தியர் யசத் வீரக்கொடி

தலைவர்

இலங்கை காது மூக்கு தொண்டை அறுவைச் சிகிச்சைக் கல்லூரி